PEOPLE FOR THE ETHICAL TREATMENT OF ANIMALS

PETA India
PO Box 28260
Juhu, Mumbai 400 049
(22) 4072 7382
(22) 2636 7383 (fax)

Info@petaindia.org
PETAIndia.com

NEWS RELEASE

# உயிருள்ள யானையைப் போன்றே தோற்றமளிக்கும் இயந்திர யானையைக் கொண்டு ‘நடையிருத்தல்’ சடங்கை முதன்முதலாக கொண்டாடும் கேரளா கோவில். இயந்திர யானையைப் பரிசாக வழங்கிய PETA இந்தியாவின் முயற்சிக்கு பார்வதி திருவோத்து ஆதரவு தெரிவித்துள்ளார்.

திருச்சூர் – உயிருள்ள யானைகள் அல்லது வேறு எந்த விலங்குகளை வைத்திருக்கவோ அல்லது வாடகைக்கு அமர்த்தவோ கூடாது என்ற கருணையுடன் கூடிய உறுதிமொழியை இரிஞ்சாடப்பில்லி ஸ்ரீ கிருஷ்ணர் கோவில் நிர்வாகம் எடுத்துள்ளது. இதையடுத்து விருது பெற்ற இந்தியத் திரைப்பட நடிகரான **பார்வதி திருவோத்து** அவர்கள் இரிஞ்சாடப்பில்லி ராமனின் நடையிருத்தலுக்கு ஆதரவளிப்பதன் மூலம், People for the Ethical Treatment of Animals (PETA) இந்தியாவுடன் கைகோர்த்துள்ளார். இரிஞ்சாடப்பில்லி ராமன் ஓர் அற்புதமான, உயிரோட்டமான இயந்திர அல்லது "ரோபோ" யானை ஆவான். இரிஞ்சாடப்பில்லி ராமன் கோவில் சடங்குகளை பாதுகாப்பாக மற்றும் கொடுமையற்ற முறையில் நடத்துவதன் மூலம், உண்மையான யானைகளின் மறுவாழ்வுக்கும், அவர்கள் காடுகளில் வாழ்வதற்கும் உதவுவார். மேலும் யானைகள் சிறைப்பிடிக்கப்படும் பயங்கரத்தை முடிவுக்கு கொண்டுவரவும் உதவுகிறார். இன்று ஆரம்பமான தொடக்க விழா நிகழ்வையடுத்து பெருவனம் சதீசன் மாரார் தலைமையிலான மேளதாள வாத்தியக் குழுவினரின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. உயிருள்ள யானைகளை டிம்பானி இசைக்கருவியின் அதீத சத்தத்திற்கு உட்படுத்துவது கொடூரமானது, ஏனெனில் இது யானைகளின் செவித்திறனுக்கு சேதம் விளைவிக்கும் என்பதோடு மிகுந்த துன்பமும் தரக்கூடியது.

**இயந்திர யானையின் புகைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகளை இங்கே காணலாம்.**

“இன்றைய காலக்கட்டத்தில், மனிதர்கள் விலங்குகளைப் பொழுதுபோக்கிற்காக பயன்படுத்தும்போது, அவற்றை விலங்குகள் சகித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் குறித்து நாம் புரிந்துகொள்வதற்கான அணுகல் உள்ளது. இதுபோன்ற துஷ்பிரயோகங்களை நிறுத்துவதற்கும், விலங்குகளை மரியாதைக்குரிய மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வாழ வைப்பதற்கும் ஏற்ற வலுவான மற்றும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றங்களைச் நாம் செய்ய இதுவே சிறந்த நேரம்,” என்கிறார் பார்வதி. “ஸ்ரீ கிருஷ்ணா கோவிலின் வழிபாட்டாளர்கள், சமயச் சடங்குகளின் மகிழ்ச்சி மற்றும் புனிதத்தை, அகிம்சையாகவும், உற்சாகமாகவும், நவீனமாகவும் மற்றும் மனசாட்சியுடனும் அனுபவிக்க உதவிடும் நோக்கில் PETA இந்தியாவை ஆதரிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.”

“எங்களின் சடங்குகள் மற்றும் திருவிழாக்களை கொடுமையற்ற முறையில் நடத்த உதவும் இந்த இயந்திர யானையைப் பெற்றுக்கொண்டதில் நாங்கள் மிகந்த மகிழ்ச்சியடைகிறோம் மற்றும் மிக்க நன்றி கூறுகிறோம். மேலும் சடங்குகள் செய்ய பயன்படுத்தப்படும் உயிருள்ள யானைகளை மாற்றுவது குறித்து மற்ற கோவில்களும் சிந்திக்கும் என நம்புகிறோம்.” என்று கூறுகிறார் கோவிலின் தலைமை அர்ச்சகர் ராஜ்குமார் நம்பூதிரி.

கேரளா உட்பட நாட்டில் சிறைபிடிக்கப்பட்டுள்ள பெரும்பாலான யானைகள் சட்டவிரோதமாக அல்லது அனுமதியின்றி வேறு மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். யானைகள், மனிதர்களின் கட்டளைகளுக்கு விருப்பத்துடன் கீழ்ப்படியாத காட்டு விலங்குகள் ஆகும். எனவே சவாரிகள், சடங்குகள், தந்திரங்கள் மற்றும் பிற நோக்கங்களுக்காக யானைகளை பயன்படுத்தும் முன்னர், கடுமையான தண்டனைகள் வழங்குவது, அடிப்பது மற்றும் உலோக முனையுடைய கொக்கி பொருத்திய ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குவது போன்ற செயல்களின் மூலம் பயிற்சியளித்து யானைகளை கட்டுப்படுத்துகிறார்கள். பல மணி நேரத்திற்கும் மேலாக கான்கிரீட் தரையில் தொடர்ந்து சங்கிலியால் பிணைக்கப்படுவதால் பல யானைகளுக்கு கால்களில் வலிமிகுந்த நோய்த் தொற்றுகள் மற்றும் காயங்கள் உள்ளன. யானைகளுக்கு போதிய உணவு, தண்ணீர் மற்றும்

Affiliates:
- PETA Asia
- PETA Australia
- PETA Foundation (UK)
- PETA France
- PETA Germany
- PETA Netherlands
- PETA US

Registered Office:
F-110, 1st Floor, Jagdamba Tower
Plot No 13, Community Centre
Preet Vihar, New Delhi
110 092

கால்நடைப் பராமரிப்பு போன்றவை வழங்கப்படுவதில்லை. இயற்கையான வாழ்க்கையை வாழ யானைகள் ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை.

சிறைப்பிடிக்கப்பட்ட விரக்தியானது யானைகளை அசாதாரணமான நடத்தையை வளர்க்கவும் வெளிகாட்டவும் வழிவகுக்கிறது. அவர்களின் புத்திசாலித்தனத்தின் முடிவில், விரக்தியடைந்த யானைகள் அடிக்கடி ஒடிச்சென்று, விடுபட முயல்கின்றனர், வெறித்தனமாக ஓடி மனிதர்கள், பிற விலங்குகள் மற்றும் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்கின்றனர். ஹெறிடேஜ் அனிமல் டாஸ்க் ஃபோர்ஸ் தொகுத்துள்ள புள்ளிவிவரங்களின்படி, 15 ஆண்டுகளில் கேரளாவில் சிறைபிடிக்கப்பட்ட யானைகள் 526 பேரைக் கொன்றுள்ளனர். சுமார் 40 ஆண்டுகளாக சிறைபிடிக்கப்பட்டு உள்ள தெச்சிக்காட்டுகாவு ராமச்சந்திரன் என்ற யானை, கேரளாவின் திருவிழா சுற்று வட்டாரங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் யானைகளில் ஒருவன் ஆவான். இவன் ஆறு யானைப் பாகன்கள், நான்கு பெண்கள் மற்றும் மூன்று யானைகள் என மொத்தம் 13 நபர்களை கொன்றதாக கூறப்படுகிறது.

யானைகளைப் பயன்படுத்தி வரும் அனைத்து இடங்கள் மற்றும் நிகழ்வுகளையும், நிஜ யானையைப் போன்ற இயந்திர யானைகள் அல்லது வேறு மாற்று வழிகளுக்கு மாறிடுமாறு PETA இந்தியா ஊக்குவிக்கிறது. ஏற்கனவே சிறைபிடிக்கப்பட்டுள்ள யானைகளை சரணாலயங்களுக்கு அனுப்பி நிரந்திர ஓய்வளிக்க வேண்டும் என்று PETA இந்தியா வாதிடுகிறது. அங்கு சங்கிலியால் பிணைக்கப்படாமல் பிற யானைகளுடன் இணைந்து நிம்மதியாக வாழலாம். மேலும் இது பல ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்ட தனிமைப்படுத்தல், சிறைப்பிடிப்பு மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றின் அதிர்ச்சியிலிருந்து யானைகள் உளவியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் குணமடைய பெரிதும் உதவும்.

PETA இந்தியா – குறிக்கோளின் ஒரு பகுதியின்படி"விலங்குகளை நமது கேளிக்கைகளுக்காகவோ அல்லது எந்த வகையிலும் துன்புறுத்தவோ அவர்கள் நம்முடையவர்கள் அல்ல" – என்பதே ஆகும். உலகிலுள்ள மனிதர்களின் மேலாதிக்க கண்ணோட்டமான விலங்கினவாதத்தை PETA இந்தியா எதிர்க்கிறது. மேலும் தகவல்களுக்கு **PETAIndia.com** என்ற இணையதளத்திலோ அல்லது **Twitter**, **Facebook**, மற்றும் **Instagram** குழுக்களிலோ பின்தொடருங்கள்.

**தொடர்புக்கு:**
ஹிராஜ் லால்ஜனி; 9619167382; HirajL@petaindia.org
சன்ஸ்கிருதி பன்சோர் 9167937382; SanskritiB@petaindia.org

#

PEOPLE FOR THE ETHICAL TREATMENT OF ANIMALS

PETA India
PO Box 28260
Juhu, Mumbai 400 049
(22) 4072 7382
(22) 2636 7383 (fax)

Info@petaindia.org
PETAIndia.com

NEWS RELEASE

Affiliates:
- PETA Asia
- PETA Australia
- PETA Foundation (UK)
- PETA France
- PETA Germany
- PETA Netherlands
- PETA US

Registered Office:
F-110, 1st Floor, Jagdamba Tower
Plot No 13, Community Centre
Preet Vihar, New Delhi
110 092